ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிலப்பதிகார நாடக அரங்கமைப்பு

முனைவர் ச.அ.சுஜா[1] & சி.சக்தி லெட்சுமி[2]

[1]உதவிப் பேராசிரியர் & [2]முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),

மதுரை – 625 018.

47

**ஆய்வுச் சுருக்கம் :**

இருப்பிடத் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக அமைந்த கட்டடங்கள் யாவும் காலப்போக்கில் கலைகளின் கூடாரங்களாகின. கோயில்கள், அரண்மனைகள் போன்றவற்றின் வரிசையில் அரங்குகளும் பிரம்மாண்ட வேலைப்பாடுகளுடன் கூடிய கட்டட அமைப்பாக, முறையாகக் கட்டப்பட்டிருந்தன. இதனைச் சிலப்பதிகாரம் சிறப்புடன் எடுத்துக்காட்டுகிறது. நாடக அரங்கை அமைப்பதற்கான நிலத்தைத் தேர்ந்தெடுப்பது முதல், அழகியல் நோக்கில் அமைந்த வேலைப்பாடுகள் வரை அணு அணுவாக நாடக அரங்கமைப்பு பற்றி விவரிப்பதாகச் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதையானது படைக்கப்பட்டுள்ளது. அத்தகைய நாடக அரங்கமைப்பை ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள் :**

சிலப்பதிகாரம் – அரங்கு – மண்ணகம் வகுத்தல் – அளவுகோல் – வாயில்கள் - எழினி - ஒளி விளக்கு – ஓவியம்.

**முன்னுரை :**

நாள் முழுவதும் ஓடி உழைத்துக் களைக்கும் உடலை உறுதிப்படுத்துவது மனம். மனதை உற்சாகப்படுத்தி உயிர்ப்போடு வைத்திருப்பதில் முக்கியப் பங்கு வகிப்பவையே பொழுதுபோக்கு அம்சங்கள். அத்தைகைய பொழுதுபோக்குகளோ இன்றைய காலத்தில் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. ஆனால், தொழில்நுட்ப வளர்ச்சிகளைக் கண்டிராத பண்டைய காலத்தில் பொழுதுபோக்கின் முக்கிய அங்கமாக இருந்தவை நாடகங்களே ஆகும். அத்தகைய நாடகங்களின் சிறப்பியல்புகளை இலக்கியங்களும் பதிவு செய்யத் தவறியதில்லை. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் ‘நாடகக் காப்பியம்’ என்றே போற்றப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதையானது நாடக அரங்கின் அமைப்பை நம் கண் முன் அப்படியே காட்சிப்படுத்துகிறது. அவ்வமைப்பைக் குறித்து இவ் ஆய்வுக் கட்டுரையில் காண்போம்.

**சிலப்பதிகாரம் – நாடகக் காப்பியம் :**

சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ என்பதாகும். இதன் மூலம் சிலப்பதிகாரம் செய்யுளாக இருப்பினும், பாட்டுக்களை உடையதாக இருப்பினும், இடையிடையே உரையாடல்களையும் உடைய நாடக அமைப்பைக் கொண்டிருப்பதனை அறியலாம். சிலப்பதிகாரம் சிறந்த நாடகக் காப்பியம் என்பதற்கு மதுரைக் காண்டத்தின் ‘வழக்குரை காதை’ மிகப் பொருத்தமான சான்றாக அமைந்துள்ளது. இதனை,

**“நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்**
**யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்**

**தேரா மன்னா செப்புவ துடையேன்”[1]**

என்னும் உரையாடலால் உணரலாம்.

சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் என்பதை வலியுறுத்த நூலின் தொடக்கமான ‘மங்கல வாழ்த்துப் பாடல்’ பகுதியையே சிறந்த உதாரணமாக விளக்குகிறார், தமிழறிஞர் டாக்டர் வ.சுப.மாணிக்கம். “திங்களைப் போற்றுதும்” (சிலப். புகார் - 1:1) என்று வரும் தன்மைப் பன்மை நடையானது, நடிப்பதற்கு முன் நாடக மாந்தர் தொழுவது போல் அமைந்திருப்பதாகச் சுட்டியுள்ளார்.[2]

நாடகத்தில் நம் கண் முன் தோன்றும் காலம், இடம், சூழல் போன்ற பின்னணி யாவற்றையும் சிலப்பதிகாரத்தில் தக்க இடங்களில் இளங்கோவடிகள் அமைத்திருப்பதும், இது நாடகக் காப்பியமே என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இன்றைய திரைப்படங்களில் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் ‘Screen Play’ என்று சொல்லப்படும் கதையின் நிகழ்ச்சிகள் யாவும், சிலப்பதிகாரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அமையாமல் முன்பின்னாக மாற்றி அமைந்துள்ள தன்மையும், இது ஒரு சிறந்த நாடகக் காப்பியம் என்னும் கூற்றிற்கு அரண் சேர்க்கிறது. சிலப்பதிகாரத்தின் கதை நிகழ்ச்சிகளின் அமைப்பு நாடக அமைப்பிற்கான மிகச் சிறந்த சான்று என்பதனை மு.வை.அரவிந்தன் தனது ‘இளங்கோவடிகளின் நாடகத் திறன்’ என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பதாக, டாக்டர் டி.மகாலட்சுமி ‘சிலப்பதிகார ஆய்வுகள் : ஓர் ஒப்பாய்வு’ என்னும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.[3]

**அரங்கு :**

அரங்குகளில் கண்டுகளிக்கும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் யாவும் நம்மை என்றும் உற்சாகப்படுத்துபவையே. 83 வயதான டென்மார்க்கின் ராணி மார்க்ரெட் அவர்கள் வடிவமைத்த நாடக அரங்கில் பொதுமக்களுடன் சேர்ந்து ‘பனிமயராணி’ என்ற நாடகத்தைக் கண்டுகளித்தார் என்றும், அதனைக் காணும்போது மனதளவில் அவர் இளமையாகத் தன்னை உணர்ந்தார் என்றும் சமீபத்தில் செய்தி ஒன்று வெளியானது.[4]

‘அரங்கு’ என்ற கட்டட அமைப்பைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல்லானது சங்க இலக்கியங்கள் பலவற்றுள்ளும், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளது.

**“அவை புகழ் அரங்கின் மேல் ஆடுவாள் அணிநுதல்”[5]**

என்று கலித்தொகையிலும்,

**“அரங்கின்றி வட்டாடி யற்றே”[6]**

என்று திருக்குறளிலும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் ‘அரங்கேற்றுக் காதை’ என்ற பெயரில் தனியொரு காதையே அமைக்கப்பட்டு, நாடக அரங்கின் அமைப்பு விரிவாகப் பேசப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**சிலப்பதிகார நாடக அரங்கமைப்பு :**

**(i) நிலத்தைத் தேர்ந்தெடுத்தல் :**

பண்டைய கால நாடகங்களிலிருந்து இன்றைய நாடகங்கள் பற்பல மாற்றங்களைப் பெற்றிருக்கும் நிலையில் நாடக அரங்கமைப்பிலும் மாற்றங்கள் உண்டாகியிருப்பதும் இயல்பான ஒன்றே. நாடக அரங்கை அமைப்பதற்கான நிலத்தைத் தேர்ந்தெடுப்பதே முதல் படிநிலையாகக்

கொள்ளப்பட்டது. மண்ணகம் வகுத்தல் (Soil Conservation) என்ற பெயரில் இது குறிப்பிடப்படுகிறது.

**"………. தித்திப்**

**பளிபெருகு மாவ தரங்கு"**[7]

மண்ணின் சுவையானது அறுசுவைகளுள் இனிப்புச் சுவையுடையதாக இருக்க வேண்டும். அதுவே நாடக அரங்கை அமைப்பதற்கான ஏற்ற நிலமாகக் கருதப்பட்டது. மேலும் ஊருக்கு நடுவே, தேரோடும் வீதிகளில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அரங்குகளை அமைத்துள்ளனர். நாடக நன்னூல் குறிப்பிடும் இக்கருத்தானது இரத்தினச் சுருக்கமாக இளங்கோவடிகள் கூறிய,

**"எண்ணிய நூலோர் இயல்பினின் வழா அது**

**மண்ணகம் ஒருவழி வகுத்தனர்"**[8]

என்னும் வரிகளிலிருந்து பிறந்ததே. இவற்றின்படி, தரமான, குற்றமற்ற நிலத்தையே நாடக அரங்கிற்கெனத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை அறியலாம்.

**"நூலறி புலவர் நுண்ணிதின் கயிறுஇட்டு"**[9]

என்னும் நெடுநல்வாடை வரியும் இதற்கு வலுச்சேர்க்கிறது.

**(ii) அரங்கமைப்பிற்கான அளவுகோல் :**

அரங்கின் நீளம், அகலம், உயரம், மேடையின் அளவு எனப் பலவற்றிற்கும் அளவுகோல் கொண்டே அளவுகள் நேர்த்தியுற எடுக்கப்பட்டு, நாடக அரங்குகள் அமைக்கப்பெற்றுள்ளன. துல்லியமான கோல் அளவிற்கென, சிலப்பதிகாரம் ஓர் இலக்கணத்தை வகுத்துத் தந்திருப்பதை,

**"புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்**
**கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு**
**நூனெறி மரபின் அரங்கம் அளக்குங்**
**கோலள விருபத்து நால்விர லாக"**[10]

என்னும் வரிகளால் அறியமுடிகிறது. பொதிகை போன்ற புண்ணிய மலைகளில் வளர்ந்த மூங்கிலின் ஒரு கணுவிற்கும் அடுத்த கணுவிற்கும் இடையே ஒரு சாண் அளவு இடைவெளி இருப்பது போன்ற மூங்கிலை எடுத்து வந்து, கைப்பெருவிரல் இருபத்து நான்கு அளவு கொண்டதாக அளவுகோல் உருவாக்கப்பட்டதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். இக்கோல் அளவு பற்றி நாடக நன்னூலானது,

**"ஒத்த அணுமுதல் உயர்ந்துவரு கணக்கின்**
**உத்தமன் பெருவிரல் இருபத்து நாலுள**
**கோலே கோடல் குறியறிந் தோரே"**[11]

என்றுரைக்கிறது. மிகவும் உயரமாகவோ அல்லது குள்ளமாகவோ இல்லாத சராசரியான உயரம் கொண்ட ஒரு மனிதனின் கைப்பெருவிரல் அளவில் இருபத்து நான்களவு கொண்டதாக ஒரு கோல் அளவு இருந்துள்ளது.

இன்று இவ்வகையான அளவீடுகளுக்கென, மிகத் துல்லியமான சென்டிமீட்டர் அளவுகளைக் கொண்ட 'அளவு நாடாக்கள்' (Inch Tape) பயன்படுத்தப்படுகின்றன.

**(iii) நாடக அரங்கின் அளவுகள் :**

கட்டடங்கள் அமைக்கப்படுவதன் பின்னணியில் (நீளம், உயரம் போன்ற அளவுகளுக்கும் கூட)

பலவிதமான சூழல்கள் காரணங்களாகின்றன. உதாரணமாக, குளிர் அதிகமுள்ள இடங்களில் மேற்கூரையின் உயரம் குறைவாக அமைக்கப்படுவதற்கும் வெப்பத்தை அதிகரிக்கச் செய்வதற்கான பின்னணியியே காரணமாகின்றது. நாடக அரங்கு என்பது அரசர் முதல் பொதுமக்கள் வரை அனைவரும் கண்டுகளிக்கும் பொழுதுபோக்கிற்கான பொது இடமாக இருந்ததனால் அதற்கேற்றாற்போல் அளவுகளைக் கொண்டிருந்தது. எத்தனை அளவு உயரம், எத்தனை அளவு நீளம், எத்தனை அளவு கொண்டதாக மேடை இருக்க வேண்டும் என்பனவற்றையெல்லாம் சிலப்பதிகாரம் சிறப்புற எடுத்துரைக்கிறது.

**“எழுகோ லகலத் தெண்கோல் நீளத்**

**தொருகோல் உயரத் துறுப்பின தாகி**
**உத்தரப் பலகையோ டரங்கின் பலகை**

**வைத்த இடைநிலம் நாற்கோ லாக”**[12]

அரங்கின் அகலமானது ஏழு கோல் அளவிற்கும் நீளமானது எட்டுக் கோல் அளவிற்கும் அமைக்கப்பட்டது. அரங்கின் தூண்களின் மீதிருந்த உத்தரப் பலகைக்கும் தளத்தில் இருந்த பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவிற்கு இடைவெளி இருக்குமாறு நாடக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசர்கள், வணிகர்கள் போன்ற செல்வந்தர்கள் தவிர மற்ற பொதுமக்கள் யாவரும் கீழே அமர்ந்து பார்க்கும் சூழலே நிலவியதால் மேடையில் நடிகர்களின் நடிப்பை அனைவரும் காண்பதற்கு ஏற்றவாறு நாடக மேடையானது ஒரு கோல் அளவு உயரமாகவே அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியினைச் சிலப்பதிகாரத்தின் வழி அறியமுடிகிறது.

இன்றைய காலத்தில் அனைவரும் சமமாக நாற்காலிகளில் அமர்ந்து பார்க்கும் சூழல் இருப்பினும், தற்காலிகமாக அமைக்கப்படும் நாடக மேடைகள், சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பது போலவே, சற்று உயரமானதாகவே அமைக்கப்படுகின்றன. ஆனால், நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள பல அரங்குகளில் பின் வரிசை செல்லச் செல்ல, பார்வையாளர் அமரும் இடங்கள் உயரமாக அமைக்கப்படுவதனைக் காணமுடிகிறது.

**(iv) வாயில்கள் (Doors) :**

கட்டட அமைப்புகளில் முக்கிய உறுப்பாக அமைவன வாயில்கள் ஆகும். வாயில்கள் இல்லாத கட்டட அமைப்புகள் முழுமை பெறா. அவ்வகையில் சிலப்பதிகாரம் காட்டும் நாடக அரங்கும் இரு வாயில்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதனை,

**“ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்**

**தோற்றிய அரங்கு”**[13]

என்னும் வரிகளால் உணரலாம். நாடக அரங்கின் நீளம், அகலம், உயரத்தின் அளவுகளுக்கு ஏற்ப இவ்விரு வாயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் அரசன் வருவதற்கென மூன்று கோல் அளவு உயரம் உடையதாக ஒரு வாயில் இருக்க வேண்டும் என்பதை,

**“நற்கோல் வேந்த னயக்குறு வாயில்**

**முக்கோ றானு முயரவு முரித்தே”**[14]

என்று நாடக நன்னூல் நவில்கிறது.

**(v) திரைகள் (Screens) :**

நாடக அரங்குகளில் நிகழ்வுகளின் மாறுதல்களை உணர்த்துவற்குப் பெரிதும் உதவுபவையே திரைகள். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்தில் நகரும் படங்களாகவே அமைகின்றன. ஆனால், பண்டைய காலத்தில் துணிகளால் உண்டாக்கப்பட்ட திரைகளே பயன்படுத்தப்பட்டன. அவை ‘எழினி’ என்ற பெயரில் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் வெவ்வேறு வகையான வேலைப்பாடுகளுடன் மூன்று விதமான எழினிகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதனைச் சிலப்பதிகாரம்,

**“ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்**

**கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்து”[15]**

என்று சித்திரிக்கிறது. ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்கு இழுத்துச் செல்வது ‘ஒரு முக எழினி’ (Pastel Screen) என்றும், மேடையின் பக்கங்களிலிருந்து ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைவது ‘பொருமுக எழினி’ (Sliding Screen) என்றும், மேலிருந்து கீழாக விழுவது போல் அமைவது ‘கரந்து வரல் எழினி’ (Rolling Screen) என்றும் வகுக்கப்பட்டுள்ளன. மேலும் நாடக அரங்கின் பின் திரைகளில் பசு, யானை, குரங்கு போன்ற மிருக உருவங்கள் வரையும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியதாக நாடக நன்னூல் குறிப்பிடுகிறது.

**(vi) ஒளியமைப்பு (Stage Lighting) :**

நாடகத்தின் உணர்வை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதில முக்கியப் பங்கு வகிப்பது ஒளியமைப்பு ஆகும். நாடக நிகழ்வில் நடிப்பின் உச்சத்தை அச்சூழலுக்கு ஏற்றாற்போல் உயர்த்திக் காண்பிக்கும் ஒளியமைப்பானது, மேடையின் தனிப்பெரும் கலை என்றே கூறலாம். மின்சாரம் கண்டறியாத சிலப்பதிகாரக் காலத்தில் மேடையில் அமைக்கப்பட்டிருந்த ஒளியமைப்பு, தமிழர்தம் அறிவை மேன்மைபடச் செப்புகிறது.

**“தூண்நிழற் புறப்பட மாண்விளக் கெடுத்து”[16]**

அரங்கில் அமைக்கப்பட்ட தூண்களின் நிழல் பார்வையாளர் அமர்ந்திருக்கும் அவையில் விழா வண்ணமும், நாடக மேடையில் நடிப்போர் முகத்தில் விழா வண்ணமும், விளக்குகள், ஒரே தன்மையிலான ஒளி தருபவையாக, அரங்கின் நான்கு மூலைகளிலும் அழகாக நிலை நிறுத்தப்பட்டனவாம்.

இன்றைய மின்பாயும் உலகத்தில் பற்பல நிகழ்வுகளுக்காக அமைக்கப்படும் மேடைகளில் ஒளியமைப்பிற்கெனத் தனிப்பெருங்குழுவே செயல்படுகிறது. பல்வேறு விதமான வண்ணமயமான ஒளி விளக்குகள் பல கோணங்களில் மேடைகளை அலங்கரிக்கின்றன.

**(vii) அரங்கின் அழகியல் :**

இன்று கட்டடக்கலையில் பெரும்பங்கு வகிக்கும் அழகியல் கூறுகள் யாவும் திடீரெனத் தோன்றியவை அல்ல. சங்க காலம் முதலாகவே அழகியல் நோக்கோடு கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலையினைத் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சிலப்பதிகாரமும் நாடக அரங்கின் அழகிய வேலைப்பாடுகளை நம் மனக்கண் முன் காட்சிப்படுத்துகிறது.

**“பூதரை யெழுதி மேனிலை வைத்து”[17]**

என்று, அரங்கின் மேல்நிலை மாடத்தில் நால்வகை வருண பூதங்கள் வரையப்பட்டு

வைக்கப்பட்டதாகச் சிலப்பதிகாரம் சித்திரிக்கிறது. இதனையே மேடையின் பின் திரையின் ‘நெற்றி’ என்னும் மேற்பகுதியில் நால்வகை வருண பூதங்கள் வரையப்பட்டதாக நாடக நன்னூல் (இயல் 2, நூற்.9) காட்டுகிறது.

மேலும் அரங்கின் விதானத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன; மாலைகள் வளைவுகளாகக் கட்டப்பட்டு, காண்போர் கண்களுக்கு விருந்தளிக்கும் விதமாக வேலைப்பாடுகள் அழகுறச் செய்யப்பட்டிருந்தன. இவற்றை இளங்கோவடிகள்,

**“ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து**
**மாலைத் தாமம் வளையுடன் நாற்றி**
**விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கத்து”**[18]

என்று காட்சிப்படுத்தியுள்ளார்.

இன்றைய நவீன நாடக அரங்குகளிலும் விதானம் மற்றும் பக்கச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. அவை Painted Wooden Planks எனப்படுகின்றன.

**தொகுப்புரை :**

- சிலப்பதிகாரம் முழுவதுமாகவே நாடகக் காப்பியமாக இருப்பினும், குறிப்பாக அரங்கேற்றுக் காதையில் நாடக அரங்க அமைப்பு விரிவாகப் பேசப்பட்டுள்ளது.
- அரங்கு அமைப்பதற்கான ஏற்ற இடமானது சிற்ப நூலாசிரியர் கூறியது போல் முறையாகத் தேர்ந்தெடுக்கட்டுள்ளது.
- அளவுகோல் நேர்த்தியாகச் செய்யப்பட்டு, துல்லியமான அளவுகளைக் கொண்டு, இரு வாயில்களை உடையனவாய் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.
- மூவகை எழினிகள் நாடக அரங்குகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- நாடக அரங்குகளின் ஒளியமைப்பு மாட்சிமை பொருந்திய விளக்குகளால் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.
- அரங்கின் திரைகள், விதானம் போன்றவற்றில் வண்ண ஓவிய வேலைப்பாடுகளும் மாலை அலங்காரங்களும் செய்யப்பட்டு, காண்போரைக் கவர்ந்துள்ளன.

**அடிக்குறிப்புகள் :**

1. சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், வழக்குரை காதை - அ.எ. : 48-50
2. இரட்டைக் காப்பியங்கள் – பக்.எண் : 40
3. சிலப்பதிகார ஆய்வுகள் : ஓர் ஒப்பாய்வு – பக்.எண் : 71
4. Sun TV செய்தித் தொகுப்பு – நாள் : 05.12.2023; நேரம் : காலை 7.30 மணி
5. கலித்தொகை – பா.எண் : 79
6. திருக்குறள் – கு.எண் : 401
7. நாடக நன்னூல் – இயல் 2, நூற். : 1
8. சிலப்., அரங்கேற்றுக் காதை - அ.எ. : 95,96
9. நெடுநல்வாடை – அ.எ. : 76
10. சிலப்., அரங்கேற்றுக் காதை - அ.எ. : 97-100

11. நாடக நன்னூல் – இயல் 2, நூற். : 5
12. சிலப்., அரங்கேற்றுக் காதை - அ.எ. : 101-104
13. மேலது – அ.எ. : 105,106
14. நாடக நன்னூல் – இயல் 2, நூற். : 7
15. சிலப்., அரங்கேற்றுக் காதை - அ.எ. : 109,110
16. மேலது – அ.எ. : 108
17. மேலது – அ.எ. : 107
18. மேலது – அ.எ. : 111-113

**துணை நின்ற ஆதாரங்கள் :**

1. **ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ), சிலப்பதிகாரம் (புகார்க் காண்டம்),** பாரி நிலையம், சென்னை, முதற் பதிப்பு, 2003
2. **ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ), சிலப்பதிகாரம் (மதுரைக் காண்டம்),** பாரி நிலையம், சென்னை, முதற் பதிப்பு, 2003
3. **முனைவர் ப.சு.இலட்சுமி, நாடக நன்னூல்,** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற் பதிப்பு, டிசம்பர் 2007
4. **முனைவர் அ.விசுவநாதன்(உ.ஆ), கலித்தொகை,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர் 2014
5. **டாக்டர் வ.சுப.மாணிக்கம், இரட்டைக் காப்பியங்கள்,** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற் பதிப்பு, சனவரி 2007
6. **டாக்டர் டி.மகாலட்சுமி, சிலப்பதிகார : ஆய்வுகள் ஓர் ஒப்பாய்வு,** நர்மதா பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, டிசம்பர் 1989
7. **முனைவர் இளம்அறிஞர்.பழனிதாசன்(உ.ஆ), திருக்குறள்.**
8. **Sun TV செய்தித் தொகுப்பு –** நாள் : 05.12.2023; நேரம் : காலை 7.30 மணி